**வளர்தமிழ் 4** **30-05-2020**

## பாடம் 8 கிளி தட்டுவாசிப்போம்.

1) பாடம் 8 ல் உள்ள படத்தை பார்த்து 30 சொற்களுக்கு குறையாமல் கதை எழுதுவோம்.

2) விடை சொல்வோம்

1. விளையாட்டுகள் எமக்கு எதைத் தருகின்றன ?

2. மரபுவழி விளையாட்டுகளை எழுதுக ?

3. மரபுவழி விளையாட்டுகள் எவ்வாறானவை ?

4. எமது முன்னோர் எவற்றை வளர்க்கும் விளையாட்டுகளை ஒழுங்கமைத்திருந்தனர் ?

5. எமது நாட்டில் விளையாடப்படும் விளையாட்டுகள் சில கூறுக ?

**3) சொற்பொருள் அறிவோம் .**

மரபுவழி ---------------------

கன்னை ---------------------

காலாற நடத்தல் ----------------

தன்னம் பிக்கை ----------------

4) மூதுரை - மடல்பெரிது தாழை ம--------------- ( பாடமாக்கவும் )

பொருள் - தாழம்பூவின் இதழ் பெ------------------ ( பாடமாக்கவும் )

**5) நொடி - விடை கூறுவோம் .**

1. ஐந்து வீட்டுக்கொரு முற்றம்

2. எட்டாத தூரத்திலே எவரும் இல்லாக்காட்டினிலே எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கிறாள். அவள் யார் ?

3. அந்தரத்திலே பறக்கும் பறவை அல்ல, அழகான வால் உண்டு அணிலும் அல்ல, அது என்ன ?

4. பூக்கும் காய்கும் கலகலக்கும்; காகம் இருக்கக் கொப்பில்லை அது என்ன ?

5. ஓடிக் கொண்டே இருக்கும் கிள்ளவும் முடியாது, வெட்டவும் முடியாது அது என்ன ?

**6) அலகு 8**

**பயிற்சிகளை மீட்டல் செய்வோம்.**

**7) பழமொழிகள்**

1. தன்பலம் கொண்டு அம்பலம் ______________________________

அ. ஏறவேண்டும்

ஆ. ஏறக்கூடாது

இ. ஏறவேண்டாம்

2. பழகப் பழக பாலும் ______________________________

அ. இனிக்கும்

ஆ. கசக்கும்

இ. புளிக்கும்

3. முயற்சி உடையார் இகழ்ச்சி ______________________________

அ. அடையார்

ஆ. அடைவர்

இ. பெறுவர்

4. பதறாத காரியம் ______________________________

அ. சிதறிப் போக்கும்

ஆ. சீரளயும்

இ. சிதறாது

5. இனிய நண்பனை இடுக்கணில் ______________________________

அ. அறியாமை

ஆ. அறியலாம்

இ. காணலாம்

## வாசிப்போம்



# செண்பகம்

செண்பகம் முல்லை நிலத்திற்குரிய பறவையாகும். இது அமைதியான பறவை. இது கறுப்பு நிற உடலும் காவிநிறச் செட்டையும் உடையது. செண்பகம் ஏனைய பறவைகளைவிட வேறுபட்ட ஒரு பண்பைக் கொண்டது. அதாவது பறவைகள் குளிர் காலத்தில் வெப்பமான இடங்களைத் தேடிச் செல்லும். ஆனால் செண்பகம் எந்தச் சூழலிலும் தான் வாழும் இடத்தை விட்டு வேறிடத்திற்குச் செல்வதில்லை. இது புழுபூச்சிகளையே பிடித்து உண்ணும். இப்பறவை யாருக்கும் எந்தத் தீங்கும் செய்வதில்லை. எந்தப் பறவைக்கும் இல்லாத தனிப் பெருமை தமிழரிடையே இப்பறவைக்கு உண்டு. செண்பகம் தமிழீழத்தின் தேசியப் பறவையாகும்.

# முருங்கை மரம்

- முருங்கை மரம் எமது தாயகத்தில் அதிகமாக வளரும்.
- இதன் இலைகள் சிறிதாக இருக்கும்.
- முருங்கை மரத்தின் பூக்கள் வெண்மை நிறமானவை.
- முருங்கை மரத்தின் காயை முருங்கைக்காய் என்பர்.
- முருங்கைக்காய் மரத்தில் காய்த்துத் தொங்கும்.
- முருங்கை இலையில் வறை வறுப்பர்.
- முருங்கைக்காயில் கறி சமைப்பர்.
- முருங்கை இலையிலும் முருங்கைக்காயிலும் இரும்பு ஊட்டம் அதிகம் உண்டு.